# எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்




**2 கொரி 4:8** கூறுகிறது **“நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை;கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;“** என்று. ஆம் நெருக்கப்படுகிற காலங்கள் எல்லார் வாழ்விலும் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நெருக்கங்கள் வாழ்க்கையில் உண்டு. அதை சில நேரங்களில் சகித்துக் கொண்டு, ஒடுங்கி போய் சோர்ந்து போகாமல் நாம் முன்னேறும் பொழுது அவற்றை நாம் மேற்கொள்ளலாம். ஆனால் மேலே **2 கொரி 4:8** இல், **“எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்”** என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு எப்பக்கத்தில் இருந்தும் நெறுக்கப்படும் பொழுது, அநேகர் ஒடுங்கிப் போய் சோர்ந்து போகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையையும் கடந்து சென்று வெற்றி பெறுபவரே, தேவனுக்கு முன்பாக விசேஷமானவர்களாய் காணப்படுகின்றனர். இதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்களை நாம் காணலாம். யோபுவிற்கு துன்பங்கள் ஏற்பட்ட பொழுது, ஒரு விதத்தில் அது அவருக்கு உண்டாகவில்லை. அவருடைய ஆஸ்தி, ஆடு மாடுகள், வயல் நிலங்கள், பொன் வெள்ளி மாத்திரமல்ல அவருடைய அருமையான 10 பிள்ளைகளையும் அவர் ஒரே நேரத்தில் இழந்தார். இதுவே எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிற ஒரு அனுபவமாகும்.

இது மாத்திரமன்றி அவருடைய சரீரமும் பாதிக்கப்பட்ட பொழுது, அவர் சோர்ந்து போய் சாம்பலில் உட்கார்ந்தார். **யோபு 6:1-4** வசனங்களில் **"யோபு பிரதியுத்தரமாக: என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். அப்பொழுது அது கடற்கரை மணலைப்பார்க்கிலும் பாரமாயிருக்கும்; ஆகையால் என் துக்கம் சொல்லிமுடியாது. சர்வவல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது; அவைகளின் விஷம் என் உயிரைக் குடிக்கிறது; தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது."** ஆம் ஒன்றன்பின் ஒன்றாக நடந்த ஒவ்வொரு காரியமும் அவரை நினைகுலையச் செய்தது. அவருடைய மனைவி மற்றும் நண்பர்களின் பேச்சும் கூட அவரை காயப்படுத்தினதேயன்றி ஆறுதல் படுத்தவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையே தாங்க முடியாத அளவிற்கு, ஆவி ஆத்துமா சரீரம் என அனைத்தையும் வேதனடையச் செய்யும். ஆனால் இவற்றை வெற்றிக்கொள்ள, இவ்வாறான சூழ்நிலையை கடந்து சென்ற நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி பார்ப்பதே சிறந்ததாகும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும், அவர் மேல் பொய் குற்றங்களை சுமத்தி அவரை கைது செய்ய வேண்டும், அவரை மலை மேல் இருந்து தள்ளி கொலை செய்ய வேண்டும் என்று கூட அன்றைய யூத மக்கள் சிலரும், பரிசேயரும், சதுசேரும், வேதபாரகரும், பிரதான ஆசாரியரும் ஒவ்வொரு நாளும் முயன்றனர். ஆனால் அவர்களால் இயலவில்லை. காரணம் இன்னும் அதற்கான நேரம் வராததுதான். ஆனால் அதற்கான காலம் உண்டான பொழுது, குறிப்பாக அவர் சிலுவையில் அறையப்படுவதற்கான வேலை உண்டான பொழுது, அவருக்கு உண்டான நெருக்கங்கள் சொல்லி முடியாது. அவர் பலமுறை தம்முடைய சீஷர்களிடத்தில் தான் காட்டிக் கொடுக்கப்பட போவதை பற்றியும், சிலுவையில் அறையப்பட போவதைப் பற்றியும் கூறினார். குறிப்பாக அவர் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு சற்று முன்பு இராபோஜன பந்தியில் இருக்கும் பொழுதும், **"அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும், என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். " (மாற்கு 14:27)** என்றார். ஆனால் அதற்கு

பேதுரு பிரதியுத்தரமாக **"அதற்கு அவன்: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று உறுதியாய்ச் சொன்னான்; எல்லாரும் அப்படியே சொன்னார்கள். " (மாற்கு 14:31)**. எல்லாரும் அப்படியே சொன்னார்கள் என்று வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் ஆண்டவரை யூதாஸ் காட்டிக் கொடுத்த பொழுது, அவனோடு வந்தவர்கள் ஆண்டவரை பிடித்த பொழுது, **மாற்கு 14:50** கூறுகிறது **"அப்பொழுது எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்."** என்று. ஆம், மூன்றரை வருடங்கள் கூடவே இருந்து, ஆண்டவர் செய்த அற்புதங்களை எல்லாம் பார்த்து, அவரோடு நடந்து உண்டு உறங்கி, தங்கள் வாழ்வையே அவருக்கு அர்ப்பணித்தவர்கள், நாங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உம்மோடு இருப்போம் என்றவர்கள், அவரை விட்டு ஓடி போனார்கள்.

இதிலும் ஒரு படி மேலாக, எந்த பேதுரு நான் மரிக்க வேண்டியதாக இருந்தாலும், உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று கூறினானோ அவன், **"நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்." (மாற்கு 14:71)**. ஆம் ஒரு சில மணி நேரத்தில் மனித மனங்கள் தலைகீழாய் மாறிப்போனது. பன்னிருவரில் ஒருவனாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டவரோடு இருந்து, ஊழியத்தை நிறைவேற்றின யூதாஸ் காரியோத்து, ஆண்டவரை காட்டிக் கொடுக்க, மற்ற 11 பேரும் அவரை விட்டு ஓடிப் போனது, அவர் அறிந்த ஒன்றாக இருந்த பொழுதும், ஆண்டவர் அவர்களுக்காக துக்கப்பட்டார். **யோ 16:32** இல், "**இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன் தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்."**. ஆம், அவரோடு இருந்த சீஷர்கள் அவரை தனியே விட்ட பொழுதும், பிதா அவரோடு கூட இருந்தபடியினால் நான் தனித்திரேன் என்றார். நம் வாழ்விலும், நம்மோடு உண்டு உறங்கி வாழ்ந்தவர்களும் நமக்கு துன்பம் உண்டாகும் பொழுது, நம்மை மறுதலித்து ஓடி போனாலும், மறவாத ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்பதே சத்தியமாகும்.

இங்கு இரண்டாவதாக, நியாயப்பிரமாணத்தின்படி, நீதியின்படி, விசாரணை செய்ய வேண்டியவர்கள் அவருக்கு விரோதமாய் பொய் சாட்சி தேடினார்கள். மேலும், **"அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக்**

**கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்." (மத்தேயு 26:65,66)**. பொய் சாட்சி தேடினது மட்டுமல்லாமல், அவர்களே பொய்யான தீர்ப்பையும் கூறுகின்றனர். இதுமாத்திரமல்லாமல் **"அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். " (மத்தேயு 26:67,68)**. ஒருபுறம் ஆண்டவருக்கு அருமையான சீஷர்கள், அவரை விட்டு ஓடி போக, மறுபுறம் பொல்லாத மனிதர்கள், நீதி நியாயத்தை திரித்து, பொய்யான குற்றங்களை சாற்றி, அதற்கான தீர்பையும் அவர்களே கூறுவது, ஆண்டவர் செய்த நன்மைக்கு பதிலாக தீமை செய்கிறவர்களாய், இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு தடைகற்களாய் காணப்படுகின்றனர். இது மட்டுமின்றி, அவரை சரீரப்பிரகாரமாக துன்புறுத்தி அவரை அவமானப்படுத்த நினைத்த அவர்களுடைய செயல்களும், மறுபுறத்தில் ஆண்டவரே நெருக்குகிறது. ஆனால் வேதவசனம் கூறுகிறது **"இயேசுவோ பேசாமலிருந்தார்." (மத்தேயு 26:63)**. ஒருவேளை நம்மேல் இப்படிப்பட்ட எதிர்பாராத பழிச்சொல் கூறப்பட்டு, நாம் அநியாயமாய், நியாயம் தீர்க்கப் பட்டால், நாம் நிலைகுலைந்து போவோம். ஆனால் ஆண்டவர் இவை யாவையும் ஒன்றுமில்லாமல் போக செய்ய வல்லவராய் இருந்தும், அமைதியாய் இருந்தார்.

மேலும் பிரதான ஆசாரியர்கள், ஆண்டவரை பிலாத்துவினிடத்தில் அழைத்துச் சென்றனர். **"அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்." (யோ 19:1-3)**. ஒருபுறம் நயவஞ்சகத்தினால், பொறாமையினால், பிரதான ஆசாரியரும் வேத பாரகரும், பரிசேயரும் ஆண்டவருக்கு விரோதமாய் செயல்பட, ரோம அரசாங்கத்தால் நியாயம் விசாரிக்க நியமிக்கப்பட்ட பிலாத்துவம் ஆண்டவரை துன்பப்படுத்த தொடங்கினான். அவன் அவரை நீதிமான் என்று

அறிந்திருந்தும், அவர் மேல் ஒரு குற்றத்தையும் காணாதிருந்தும் **(லூக் 23:22)**, ஜனங்களை பிரியப்படுத்த மனதுள்ளவனாய் **(மாற்கு 15:15)**, தன் பதவியை பாதுகாத்துக் கொள்ள, ஆண்டவரை அவர்கள் விருப்பப்படி சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுத்தான்.

இதில் விசேஷம் என்னவென்றால், ஆண்டவரிடத்தில் பிலாத்து கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் ஏதும் கூறவில்லை. இதனால் , **"அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்." (யோ 19:10,11)**. ஆம் ஒருபுறம் பிலாத்து நீதி தவறி செயல்படுவதும், தான் இஷ்டப்படி நீதியை வளைக்கக் கூடியவன் என்று கூறிய பொழுதும், ஆண்டவர் அவனுக்கு பிரதியுத்தரமாக கூறிய காரியம், பரலோகத்தில் இருந்து இப்படிப்பட்ட காரியங்கள் நடக்க வேண்டும் என்று திர்மாணிக்கப்பட்டால் யொழிய, மற்றபடி ஆண்டவரின் மேல் அவருக்கு தீர்ப்பு கொடுப்பதற்கு அவனுக்கு ஒரு அதிகாரமும் இல்லை என்பதே. இவ்வாறாக ஆண்டவருக்கு எதிராக உடன் இருந்த சீஷர்களும், நயவஞ்சக எதிரிகளும், நீதி தவறிய அரசாங்கத்தினரும் செயல்பாட்டாலும் ஆண்டவர் அதன் மத்தியிலும் அமைதியாகவே இருந்தார்.

மேலும் அவர் சிலுவையில் அறையப்பட்டு வேதனை மத்தியில் தொங்கி கொண்டிருக்கையில் **"போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து: நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள்." (லூக் 23:36,37)**. மேலும் **"அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின்**

**ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்." (மத்தேயு 27:39-44).** ஆம் அவரை சிலுவில் அறைந்து தங்கள் வஞ்சகத்தை தீர்த்த பின்பும் அவரை தொடர்ந்து ஏளன பேச்சால் வேதனைப்படுத்தினர். தாங்கள் யாரை சிலுவையில் அறைந்திருக்கிறோம் என்பதை உணராத போர் சேவகரும், இவற்றில் ஒன்றையும் அறியாத அவ்வழியாய் நடந்து போகிறவர்களும் தூஷணமாய் பேசியது எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிற ஒரு அனுபவமாகும்.

அதிலும் குறிப்பாக **"அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்." (லூக் 23:39-42).** இங்கு சிலுவையில் அறையப்படும் அளவிற்கு கொடும் குற்றம் செய்து, உயிர் போகும் நிலையில் உள்ள அந்த குற்றவாளி, ஆண்டவரை நிந்தித்து பேசியது ஒருவராலும் பொறுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையாகும். ஆனால் அதன் மத்தியிலும் ஆண்டவர் கூறியதெல்லாம் **" பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். " (லூக் 23:34).**

ஆம் ஒரு நாள் பொழுதில் ஆண்டவர் இத்தனை விதமான மக்களிடம் இருந்தும் நெருக்கங்களை அனுபவித்தும், அவர் நோக்கமோ, பிதாவின் சித்தத்தை சிலுவையில் நிறைவேற்றி முடிப்பதிலேயே இருந்தது. **"இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்." (லூக் 23:46).** ஆம் பிதாவின் திட்டத்தை நிறைவேற்றி

முடிப்பதையே அவர் நோக்கமாக கொண்டிருந்ததால், அவர் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும், அதை கடந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி முடித்தார். நம் வாழ்விலும் இதுபோன்ற எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிற அனுபவங்கள் வந்தாலும், நம் இலக்கு ஆண்டவருடைய சித்தத்தை, திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், ஆண்டவர் எதையும் தாங்கிக் கொள்வதற்கும், அதை ஜெயமாக கடந்து செல்வதற்கும் வேண்டிய பெலனை, கிருபையை நமக்கு அருளுவார். எனவே நமக்கு வரும் நெருக்கங்களால் நாம் ஒடுங்கி போகாமல், சோர்ந்து தளர்ந்து விடாமல், நம் ஓட்டத்தை ஜெயமாக முடித்து, ஆண்டவர் வருகையில் அவர் அண்டை சேர நம்மை ஆயத்தப்படுத்துவோமாக, ஆமென், அல்லேலூயா.